முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2016 யூலை

# (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2016-07-23
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும் விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள் மாத்திரம் அனுமதிக்கப்படும்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு வினா* ***வினைச் சொல்லினைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கப் பரீட்சை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள 16 வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.7*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** கீழே தரப்பட்டுள்ளவற்றில் எந்தக் கூட்டம் நிதி நிலைமையின் மூலங்களைக் கொண்டுள்ளது?

(1) சொத்துக்கள், உரிமையாண்மை, வருமானம் (2) சொத்துக்கள், பரிப்புக்கள், செலவுகள்

(3) சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் (4) சொத்துக்கள்,பரிப்புக்கள், உரிமையாண்மை

(02 புள்ளிகள்)

**1.2** கீழ்வருவனவற்றுள் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் அனுகூலம் **அல்லாதது** எது?

(1) முறைமையின் வேகம் உயர்வானது.

(2) பிறப்பிக்கப்படும் தகவல்களின் செம்மை மிக உயர்வானது.

(3) இதனால் எந்தவொரு குறிப்பிடப்பட்ட திகதி வரையான அறிக்கைகளையும் பிறப்பிக்க முடியும்.

(4) உள்ளீடு செம்மையற்றதாக இருந்தபோதிலும் இதனால் செம்மையான வெளியீட்டினைப் பிறப்பிக்க முடியும். (02 புள்ளிகள்)

**1.3** செலவுப் பதிவுக் குறிப்பு (Credit Note) என்பது,

(1) திருப்பி அனுப்பிய பொருளின் தொகையைக் குறைக்கும் பொருட்டு வாங்குநரால் விற்பனையாளருக்கு வழங்கப்படும் ஆவணம்

(2) முன்னைய விலைப்பட்டியலின் கட்டுறுப்புகளின் கீழ் வாங்குநர் செலுத்த வேண்டிய தொகை குறைக்கப்பட்டதை தெரிவித்து பொருட்களின் விற்பனையாளரால் வாங்குநருக்கு வழங்கப்படும் ஆவணம்

(3) வாங்குநரிடமிருந்து பணத்தைப் பெறும்போது ஏற்படுத்தப்படும் ஆவணம்

(4) விற்பனையாளருக்குப் பணம் செலுத்தும்போது ஏற்படுத்தப்படும் ஆவணம் (02 புள்ளிகள்)

**1.4** ஒரு உரிமத்தின் ஒரு கணக்கியற் காலத்திற்கான நிதிக் கூற்றுக்களை வேறொரு காலத்தின் நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்வதனை வசதிப்படுத்தும் கணக்கியற் கோட்பாடு எது?

(1) பொருண்மைக் கோட்பாடு  (2) கொள்கை மாறாமைக் கோட்பாடு

(3) பண அளவீட்டுக் கோட்பாடு  (4) அட்டுறு கோட்பாடு (02 புள்ளிகள்)

**1.5** கீழ்வருவனவற்றுள் முதன்மைப் பதிவேடு **அல்லாதது** எது?

(1) பொதுப் பேரேடு  (2) காசேடு

(3) பொது நாட்குறிப்பேடு  (4) கொள்வனவு நாளேடு (02 புள்ளிகள்)

**1.6** கீழ்வருவனவற்றில் எந்த வழுவினை பரீட்சை மீதியைத் தயாரிப்பதன் மூலம் கண்டுபிடிக்க முடியும்?

(1) ரூ.45,000/- க்கான விற்பனைப் பட்டியல் (sales invoice) இரு தடவைகள் விற்பனைக் கணக்கிலும் வியாபார வருமதிகள் கணக்கிலும் பதியப்பட்டமை

(2) உரிமையாளர் எடுத்துக்கொண்ட ரூ.12,500/- பெறுமதியான பொருட்கள் பற்றி கணக்கேடுகளில் எந்தவொரு பதிவும் மேற்கொள்ளப்படாமை

(3) பெறப்பட்ட கழிவான ரூ.20,000/- அனுமதிக்கப்பட்ட கழிவுக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டமை

(4) கடன் வட்டியான ரூ.30,000/- மேலதிகப்பற்று வட்டியாக பதிவு செய்யப்பட்டமை

(02 புள்ளிகள்)

**1.7** வியாபார சென்மதிகள் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் ஒரு கம்பனியின் ஏடுகளிலிருந்து 2016 ஏப்ரல் மாதத்திற்காகப் பிரித்தறியப்பட்டவையாகும்.

| விபரம் | ரூபா |
|---|---|
| 2016 ஏப்ரல் 01 இல் மீதி | 825,000 |
| மாதத்தின்போது செலுத்திய பணம் | 462,200 |
| கொள்வனவுத் திரும்பல்கள் | 75,000 |
| 2016 ஏப்ரல் 30 இல் மீதி | 955,300 |

2016 ஏப்ரல் மாதத்தின்போது மேற்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் கொள்வனவுகள்,

(1) ரூ. 517,500/-. (2) ரூ. 667,500/-.

(3) ரூ. 676,500/-. (4) ரூ. 256,900/-. (02 புள்ளிகள்)

***1.8*** *முதல்* ***1.16*** *வரையான வினாக்களுக்கு சரியான விடையினை உமது விடைப்புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தினை எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.8** பொதுத் தேவை நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் ஓர் அடிப்படைத் தர ரீதியிலான குணவியல்பாகக் கருதப்படுகின்ற **தொடர்புடைமை** (relevance) என்பதன் கருத்தினைக் **கூறுக.**

(02 புள்ளிகள்)

**1.9** வியாபாரமொன்றின் இரண்டு (02) நாட்டதாரர்களை (stakeholders) **கூறுக.** (02 புள்ளிகள்)

**1.10** ''உரிமையாண்மை'' (Equity) எனும் பதத்தினை **வரைவிலக்கணப்படுத்துக.** (02 புள்ளிகள்)

**1.11** பொருண்மைக் கோட்பாட்டினை (Materiality Concept) சுருக்கமாக **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

**1.12** பொதுவான கணக்கீட்டு மென்பொருள் பொதிகளுக்கு (general accounting software packages) மூன்று (03) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

**1.13** **அனில்** காகிதாதிகள் விற்பனை செய்யும் வியாபாரத்தினை நடாத்தி வருகின்றார். அந்த வியாபாரம் தொடர்புபட்ட சில ஊடுசெயல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) வரையறுக்கப்பட்ட **மியாமி புக்ஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து** கடன் அடிப்படையில் ரூ.10,000/- க்கு காகிதாதிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

(ii) விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களுக்காக வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து ரூ. 2,500/- க்கான காசோலை பெறப்பட்டது.

(iii) **வரையறுக்கப்பட்ட மியாமி புக்ஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து** கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகளில் ரூ. 1,000/- பெறுமதியானவற்றை **அனில்** திருப்பி அனுப்பினார்.

மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடுசெயலையும் பதிவு செய்வதற்குத் தேவையான முதன்மைப் பதிவேடுகளை **இனங்காண்க.**

(03 புள்ளிகள்)

**1.14** கீழ்வரும் செலவுகள் ஒவ்வொன்றையும் மூலதனச் செலவாக அல்லது வருமானச் செலவாக **வகைப்படுத்துக.**

(i) கொள்வனவு செய்யப்பட்ட புதிய எந்திரத்தினை நிருமாணித்தற் கிரயம் (Installation cost) ரூ.100,000/-.

(ii) பாதுகாப்பு ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூ. 10,000/-.

(iii) மின் கட்டணக் கொடுப்பனவு ரூ. 8,000/-. (03 புள்ளிகள்)

**1.15** கீழ்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. வினா இலக்கத்தை உமது விடைப் புத்தகத்தில் ஒன்றின்கீழ் ஒன்றாக எழுதி அவற்றிற்கு எதிராக சரியான விடையினை (சரியானது அல்லது தவறானது) எழுதுக.

(i) கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்படும் காசு விற்பனைகள், விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படும்.

(ii) ஊடுசெயல்களைப் பதிவு செய்தலில் காசேடானது முதன்மைப் பதிவேடாகவும், பேரேட்டுக் கணக்காகவும் பயன்படுகின்றது.

(iii) ஆண்டின்போது பதிவழிப்புச் செய்யப்படும் அறவிடமுடியாக் கடன் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும். (03 புள்ளிகள்)

**1.16** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்குமான சரியான இரட்டைப் பதிவுகளைக் **கூறுக.**

(i) **கம்பனி X** ஆனது வியாபாரக் கடன் கொடுத்தோரான **உதானவுக்குச்** செலுத்த வேண்டிய ரூ.50,000/- இனை, கழிவாக ரூ. 3,750/- இனைக் கழித்த பின்னர் செலுத்தியது.

(ii) வியாபார உரிமையாளர் தமது தனிப்பட்ட தேவைக்காக ரூ. 3,000/- இனை வியாபாரத்தில் இருந்து எடுத்தார்.

(iii) **கம்பனி Y** ரூ. 1,500,000/- பெறுமதியான மோட்டார் வாகனமொன்றினை ரூ. 750,000/- க்கு காசோலையொன்றினைக் கொடுத்து கொள்வனவு செய்தது. எஞ்சிய தொகை 30 நாட்களுள் செலுத்தப்பட வேண்டும். (06 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

## பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

தமது பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், **மங்கள** காசாக ரூ. 2,500,000/- இனை முதலீடு செய்து 2016 மே 01 ஆந் திகதி மின்சாதனங்களை விற்பனை செய்யும் **M & M டிரேடர்ஸ்** எனும் வியாபாரத்தை ஆரம்பித்தார். 2016 மே மாதத்தில் இடம்பெற்ற ஊடுசெயல்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | விபரம் |
|---|---|
| 01.05.2016 | பொருட்களின் விநியோகத்திற்காக ரூ. 720,000/- பெறுமதியான தனது மோட்டார் வானை வியாபாரத்திற்கு மாற்றியிருந்தார். |
| 03.05.2016 | ரூ. 1,200,000/- பெறுமதியான மின்சார சாதனங்களை ரூ. 900,000/- காசாகச் செலுத்தி கொள்வனவு செய்தார். எஞ்சிய தொகை 60 நாட்களுள் செலுத்தப்பட வேண்டும். |
| 10.05.2016 | அலுவலக கட்டடத்திற்கான மாதாந்த வாடகை ரூ. 35,000/- . இந்தக் கட்டடப் பாவனைக்காக 6 மாத வாடகை முற்பணமாகச் செலுத்தப்பட்டது. |
| 11.05.2016 | 2016 மே மாதத்திற்கான கட்டட வாடகை ரூ. 35,000/- செலுத்தப்பட்டது. |
| 26.05.2016 | மின்சார சாதனங்கள் ரூ. 623,000/- க்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது. |
| 30.05.2016 | சிற்றுக் காசேட்டு மிதப்பினைத் தாபிக்கும் பொருட்டு சிற்றுக் காசாளருக்கு ரூ.25,000/- செலுத்தப்பட்டது. |
| 31.05.2016 | ஆண்டிற்கு 10% வட்டி வழங்கும் ரூ. 600,000/- நிலையான வைப்பு ஆரம்பிக்கப்பட்டது. |

மேலதிக தகவல் :

மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு கிரயத்தில் 20% தேய்மானம் செய்யப்படும்.

**நீர் செய்ய வேண்டியது,**

மேற்படி தகவல்களின் அடிப்படையில்,

2016 மே 31 ஆந் திகதியில் **M & M டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

### வினா 03

2016 மார்ச் 31 ஆந் திகதி கணக்கியல் உதவியாளரினால் தயாரிக்கப்பட்ட **PC டிரேடர்ஸின்** பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் தொங்கற் கணக்கிற்கு மாற்றப்பட்டு வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.

வரைவு நிதிக் கூற்றுக்களின்படி 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் ரூ.250,000/-.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன :

(1) வியாபார உரிமையாளரால் தனது தனிப்பட்ட தேவைக்காக எடுக்கப்பட்ட வியாபாரப் பொருட்களின் பெறுமதி ரூ. 62,500/- கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(2) வாடகை வருமானம் ரூ. 112,400/- ஆனது வாடகைச் செலவுக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப் பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

(3) ரூ. 32,500/- க்கு கொள்வனவு செய்யப்பட்ட பதிகருவி (Printer) திருத்த மற்றும் பராமரிப்புக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

(4) ரூ. 298,000/- க்கான கடன் கொள்வனவு, வியாபார சென்மதிக் கணக்கு மற்றும் கொள்வனவுக் கணக்கு இரண்டிலும் ரூ. 289,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) ஊழியர் சேமநலன் செலவு ரூ. 1,800/- காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்ட போதிலும் விளம்பரச் செலவுக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது.

***நீர் செய்யவேண்டியது,***

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் (06 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான செம்மையாக்கப்பட்ட இலாபத்தினைக் காட்டும் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் பட்டிகளை (tapes) உற்பத்தி செய்யும் வரையறுக்கப்பட்ட **∴பைன் ரேப்ஸ் கம்பனியின்** 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டு சம்பந்தப்பட்டதாகும்.

2015 ஏப்ரல் 01 ஆந் திகதி மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதி தொக்குகள் :

| தொக்கின் வகை | 2015 ஏப்ரல் 01 ரூபா | 2016 மார்ச் 31 ரூபா |
|---|---|---|
| மூலப்பொருட்கள் - ரேப் உருளைகள் | 2,560,000 | 1,750,000 |
| புத்துருவாகும் வேலை (மொத்த உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 1,225,000 | 850,000 |

ஆண்டின்போது இறுக்கப்பட்ட ஏனைய செலவின விபரங்கள் வருமாறு :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருட்கள் கொள்வனவு | 5,950,000 |
| உள்வண்டிக் கூலி (மூலப்பொருட்கள்) | 330,000 |
| கட்டடத் தேய்மானம் | 650,000 |
| தொழிற்சாலை எந்திரத் தேய்மானம் | 1,875,000 |
| கூலி – எந்திர இயக்குநர்கள் | 4,278,000 |
| சம்பளம் - உற்பத்தி முகாமையாளர்கள் | 750,000 |
| சம்பளம் - நிருவாக ஊழியர் | 450,000 |
| மின்சாரச் செலவுகள் | 1,380,000 |
| தொலைபேசிச் செலவுகள் | 120,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

(1) கட்டட நிலப்பரப்பின் $\frac{1}{10}$ பங்கு அலுவலகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

(2) 2016 மார்ச் மாத இறுதியில் கீழ்வரும் அட்டுறு செலவுகள் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்

| | ரூ. |
|---|---|
| உற்பத்தி முகாமையாளர் சம்பளம் | 65,000 |
| எந்திர இயக்குநர்கள் - உபகாரக் (bonus) கொடுப்பனவு | 15,000 |

(3) பின்வரும் செலவுகள் தரப்பட்டுள்ள விகிதங்களில் ஒதுக்கப்பட வேண்டும் :

| செலவு | தொழிற்சாலை | நிருவாகம் |
|---|---|---|
| மின்சாரச் செலவுகள் | 90% | 10% |
| தொலைபேசிச் செலவுகள் | 40% | 60% |

***நீர் செய்யவேண்டியது,***

2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட ∴ **பைன் டிரேடர்ஸ் கம்பனியின்** உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக**. (10 புள்ளிகள்)

## வினா 05

***ஹர்ஷன*** 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி தமது தந்தையின் உதவியுடன் சொந்த வியாபாரம் ஒன்றினை ஆரம்பித்தார். 2016 ஏப்ரல் மாதத்திற்கான அவரின் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் ஊடுசெயல்கள் பிரித்தறியப்பட்டன.

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 01.04.2016 | வியாபாரத்தை ஆரம்பிக்கும் பொருட்டு அவர் பணமாக ரூ. 750,000/- இனையும் மீள்விற்பனைக்காக ரூ. 325,000/- பெறுமதியான பொருட்களையும் உள்ளிட்டார். |
| 03.04.2016 | ரூ. 75,000/- கிரயமான பொருட்களை ரூ. 100,000/- காசுக்கு விற்பனை செய்தார். |
| 15.04.2016 | ரூ. 200,000/- கிரயமான பொருட்களை ரூ. 250,000/- க்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்தார். |
| 19.04.2016 | கடன் அடிப்படையில் ரூ. 525,000/- க்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 25.04.2016 | வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து ரூ. 10,000/- சேகரிக்கப்பட்டது. |
| 30.04.2016 | ரூ. 100,000/- பணம் செலுத்தி அலுவலகப் பாவனைக்காக ஒரு மோட்டார் சைக்கிள் ரூ. 250,000/- க்குக் கொள்வனவு செய்யப்பட்டது. எஞ்சிய தொகை 2 மாதங்களுள் செலுத்தப்பட வேண்டும். |

***நீர் செய்யவேண்டியது,***

(a) கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேலுள்ள ஒவ்வொரு ஊடுசெயல்களினதும் தாக்கத்தினையும் **பதிவுசெய்க.**

*(நிலையான சொத்துக்கள் + தொக்குகள் + கடன்பட்டோர் + காசு = மூலதனம் + பரிப்புக்கள்)*

(07 புள்ளிகள்)

(b) 2016 ஏப்ரல் 30 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

இந்தப் பகுதியிலுள்ள ஒரே (01) வினாவுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**சாந்தவுக்குச்** சொந்தமான (தனியுரிமையாளர்) **சாந்த டயர் டிரேடர்ஸின்** 2016 மார்ச் 31 ஆந் திகதியில் பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**2016 மார்ச் 31 ஆந் திகதி பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணி மற்றும் கட்டடம் (காணிப் பெறுமதி ரூ.1,500,000/-) | 12,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 7,500 | |
| தளபாட இணைப்புகள் | 5,500 | |
| திரள் தேய்மானம் - 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி : | | |
| கட்டடம் | | 1,038 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,280 |
| தளபாட இணைப்புகள் | | 2,200 |
| தொக்குகள் - 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி | 3,500 | |
| எடுப்பனவுகள் | 190 | |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு – 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி | | 23 |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 4,333 | 2,662 |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 35,000 | 54,500 |
| மின்சார, நீர்க் கட்டணங்கள் | 1,045 | |
| சம்பளமும் கூலிகளும் | 1,947 | |
| விற்பனைப் பணிசை | 930 | |
| உள்வண்டிக் கூலி | 450 | |
| பெற்ற கழிவு | | 35 |
| சோலைவரி | 537 | |
| விளம்பரச் செலவு | 2,590 | |
| மூலதனம் - 2015 ஏப்ரல் 01 இல் | | 20,660 |
| 12% வங்கிக் கடன் | | 4,500 |
| காசுக் கையிருப்பு | 8,219 | |
| வங்கி மீதி | 5,157 | |
| | **88,898** | **88,898** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2016 மார்ச் 31 ஆந் திகதி இறுதித் தொக்கு ரூ. 1,320,000/-.

(2) வியாபாரத்தின் தேய்மானக் கொள்கை, நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்தலாகும்.

| | | |
|---|---|---|
| கட்டடம் | - | ஆண்டுக்கு 5% |
| மோட்டார் வாகனங்கள் | - | ஆண்டுக்கு 20% |
| தளபாட இணைப்புகள் | - | ஆண்டுக்கு 25% |

(3) 2016 மார்ச் 31 ஆந் திகதி **லீனாவிடமிருந்து** வியாபார வருமதியாகவிருந்த ரூ. 33,000/- அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன் ஐயுறவுக் கடனுக்கான பொதுவான ஏற்பாடு ஆண்டின் இறுதியில் நிலுவையாகவுள்ள வியாபார வருமதியாளர் மீதியின் 5% ஆக இருக்க வேண்டும்.

(4) விற்பனையின் 2% விற்பனைப் பணிசையாக விற்பனை ஊழியருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

(5) 12% வங்கிக்கடன் 2016 மார்ச் 01 ஆந் திகதி பெறப்பட்டதாகும். இது சமனான 12 மாதத் தவணைக் கட்டணங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன், வட்டி 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து அறவிடப்படும்.

**நீர் செய்யவேண்டியது,**

கீழ்வருவனவற்றினைத் **தயாரிக்குக** :

(a) 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |